ஸ்ரீ:

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

விகாரிஸு தைமீ 3வ

கோயிலுக்குப்போய் தலைமுடி இறக்குதல்

ஆரியர்காள்!!

இக்காலத்தவர்கள் கோவிலுக்குப்போய் கடவுளுக்காகத் தலையை மொட்டையடித்து வருகிறார்களே இது என்ன விபரீதம் பாருங்கள்! இது ஓர்பாபம். நமதாரியர்களுக்குச் சூடாகரணம் என்னும் கர்மமானது அதிகப் பிரயாசத்தால் அனேகமான மந்திரங்களைக் கொண்டல்லவோ செய்யப்படுகிறது. கும்பாபிஷேகம் முதலானவைகளில் கும்பஸ்தாபனஞ்செய்தபிறகு சாஸ்திரத்திற் சொன்னபடி கும்பாபிஷேகம் செய்யப்படுவதற்கு முன்மழையானது ஒருதுளியேனும் விழக்கூடாது. அதுபோல் சௌளஞ் செய்வதற்குமுன் பிறனுடையகைக்கத்திமயிரைக்ஷவரஞ்செய்வதுபாமரனுகியஆரியக்குழந்தைக்குந்தகாதகாரியமாம். முதலில் பிதாவானவன் புத்திரனுக்குக் குடுமியை மந்திரத்தால் செய்கிறான். பிறகு மற்றவர்கள் க்ஷவரஞ்செய்யலாம். பிராம்மணர்கள் அந்தக் குடுமியையும் பூநூலையும் தாங்கள்செய்யும் கர்மங்களுக்குஅங்கமாகத் தரிக்கிறார்கள். ஆரியர்களுக்குக் குடுமியும் பூநூலுமே முக்கியமான இலக்கணமென்று சுருதி கூறுகின்றது. பெரியோர்களுஞ் சொல்லுகிறார்கள். சில கர்மங்களுக்குச் சர்வாங்க க்ஷவரஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும், சில கர்மங்களில் குடுமியை வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், சில கர்மங்களில் சடைபோட்டுக்கொள்ளவேண்டுமென்றும், சாஸ்திரங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. க்ஷவரஞ் செய்துகொள்ளுவதற்கு அந்தந்தக்கருமங்களுக்குத் தக்கபடியும் அந்தந்த ஆசிரமங்களுக்குத் தக்கபடியும் காலமேற்படுத்தப்பட்டிருக்கின்றது. காலமல்லாத காலத்தில் க்ஷவரஞ்செய்துகொண்டால் அதிகதோஷமுண்டென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. மஹிளேயென்னும் பேய்பிடித்த இக்காலத்து ஆரியர்கள் சௌளகர்மஞ்செய்வதற்குமுன்னால் காளிமுதலான தேவதைகளுக்காக நாவிதனை வரவழைத்துக் கிரமமில்லாமலும் யாதொரு கர்மமுஞ்செய்யாமலும் ஸ்திரீகளுக்கும் புருஷனுக்கும் மொட்டையடிக்கச் செய்கிறார்களே. இவர்களுக்கு இதுவும் ஓர் முட்டாள்தனமாம். இது எங்கும் சாதாரணமாய் நடந்து வருகின்றது. குழந்தைகளுக்கு மாத்திரமன்று. அதிக வயதுள்ளவர்களும் இப்படியே மொட்டையடித்துக்கொள்ளுகிறார்கள். அதாவது திருப்பதியில் தெலுங்கர்களிற் பிராமணர்களும் சுமங்கலிகளுக்கு அவர்களுடைய பர்த்தாக்களின் முன்னிலையாகவே சுவாமிக்காக மொட்டையடித்து விடுகிறார்கள்

[illegible]

இது என்ன அக்கிரமம் சிவ சிவ! அநுமாத்திரமா! அந்தச் சுமங்கலிகளுடைய பர்த்தாக்கள் தாங்களும் அப்படியே மொட்டையடித்துத் தங்கள் குழந்தைகளுக்கும் அப்படியே செய்வித்துப் பெண்சாதி புருஷன் பிள்ளைகள் எல்லாரும் ஒருமிக்க ஏகமொட்டைகளாய்ச் சஞ்சரிப்பதைப் பார்த்தால் ஹாஸ்ய ரஸத்துக்கு இவர்களே மூர்த்திகளாய் இருக்கிறார்கள். அங்கு ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்குமுள்ள விசேஷமிது. ஸ்திரீகள் கறுப்பு வஸ்திரத்தால் மொட்டைத்தலைக்கு முட்டாக்குப்போட்டுக்கொள்ளுகிறார்கள். புருஷர்களுக்கு அந்த முட்டாக்கு இல்லை. இதுதான் விசேஷம். இத்தேசத்திலும் பிராமணர்கள் தவிர மற்ற ஜாதியார்களிடத்தில் இந்த விபரீதமும் இருக்கிறது. வடதேசத்திலோ இந்த தர்மமானது எல்லாச்சாதியார்களிடத்திலும் சாதாரணமாயிருக்கிறது, பர்த்தா இறந்துபோனபிறகு அவன் தன் பத்தினியின் மொட்டைத்தலையைப் பார்க்கமாட்டான். ஆகையால் தன்பத்தினியின் மொட்டைத்தலையையுடைய முகத்தைப்பர்த்தா பார்ப்பதற்காகவே புருஷனுயிருடன் இருக்கும்போது அவனுடைய ஸ்திரீகளுக்கு மொட்டையடித்துவிடுகிறார்கள்போலும்! இந்தத் துராசாரமானது சூத்திரர்களுக்கு அவர்கள் எச்சிலைச்சாப்பிடும் துராசாரமிருப்பதுபோல் இதுவுமோர் துராசாரமாக இருக்கட்டும். இருந்தாலும் இந்தத் துராசாரமானது சிஷ்டர்களையும் அனுசரித்துக்கொண்டிருக்கிறது. இத்தேசத்திலும் குழந்தைகளுக்குச் செவ்வாய்க்கிழமையிலும் சனிக்கிழமையிலும் க்ஷவரஞ் செய்விக்கிறார்கள். இதில் விவஸ்தை சுத்தமாயில்லை. ஜனங்களுக்கு இப்படிப் புத்தி இலலாமற் போகுமா? கஷ்டம் கஷ்டம!! இப்படிப்பட்ட க்ஷவரத்தை வெகுபய பக்தியுடன் சுவாமிக்காக அவசியம் செய்யவேண்டுமென்று வேதத்தில் எங்கும் காணோம். தவிர, ஸ்மிருதி புராணம் இதிஹாசம் முதலான சாஸ்திரங்களிலும் கணடிலேம் இது கலி மகாராஜனுடைய சிஷ்டாசார சங்கிரஹ புஸ்தகத்தில் நிரூபிக்கப்படும். அவை யாவன, ஒவ்வோர் கிராமத்திலுமுள்ள கிளப்புகளில் பூஜை செய்வதும், வைசுவதேவம செய்வதும் சுவாமிக்காகத் தலையைமொட்டையடித்தல், விவஸ்தையில்லாமல் சாப்பிடுவதற்குச் சத்திரத்தை யேற்படுத்தல் காந்தீ சிராத்தத்தில் பிராம்மணர்களுக்குச் சோமன்வாங்கிக்கொடுத்தல்,வரதெக்ஷிணைகொடுத்தல்,சூத்திரனுடைய திரவியங்களைக்கொண்டு யாகஞ்செய்தல், எப்போதுஞ் சூத்திரனையே சேவிப்பது, சூத்திரனுடைய அன்னத்தைச் சாப்பிடும் நியமம், சூத்திரனுடைய பந்தியில் சாப்பிடுதல், புருஷர்கள் தாசியைவைத்துக்கொண்டு அவளிடத்தில் சம்போகஞ்செய்வதால் தோஷமில்லையென்பதும், பெருமாள்கோவிலில்தயிரன்னம், புளியன்னம் முதலானவைகளை வாங்கிக்கொள்ளுவதும், பரமசிவனுடைய நிர்மாலியத்தில் கீழ்ப்பட்ட ஜாதியார்களோடு நித்தியமான புத்தியுண்டாதலும், சபிண்டீகரணசிராத்தத்தில்யோக்கியனைத்தள்ளுதல்முதல்

[illegible]

சிராத்தத்தில் பிராம்மணனென்று பூநூலை மாத்திரந் தரிப்பவர்களை நிமந்திரணஞ் சொல்லுதலும், ஆப்திகத்தில் பிராம்மணார்த்தஞ் சாப்பிட்டால் பிராயச்சித்தம் செய்யவேண்டியதில்லையென்பதும், மாட்டை நேராய்த்தானம்வாங்குவதும் கூடாது. அதற்குப் பிரதிநிதியாய் எதையாவது வாங்குவது நியாயமென்பதும் மாசிகத்தில் பிராம்மணார்த்தம் சாப்பிடுதலுங் கூடாது. அதில்ஆமசிராத்தம்வாங்குவதுமட்டும்நியாயமென்பதும் அமாவாசையில் தர்ச சிருத்தத்தைச்செய்யாமல் திலதர்ப்பணத்தைச்செய்வதும், திலதர்ப்பணத்தையும்செய்யாமல் ஹிரண்ய சிரார்த்தத்தைச் செய்வதும், காம்ய கிருச்சிரங்களிலும் பிராயச்சித்தங்களிலும் எங்கும்சுவர்ணரூபமாகச்செய்தலும், பெருங்கூட்டத்தில் சாப்பிடுவதும், ஸஹஸ்ரபோஜனம் முதலானவைகளில்வெகு ஆவலாய்ப்போய் சாப்பிடுவதும, கூட்டத்தில் பலியை வாங்குவதும், தன்வீட்டில் சாக்ஷியில்லாமல் சாப்பிடுவதும், எங்கும் தனக்குமட்டும்சமயல்செய்வதும், நியாயம் அநியாயமில்லாமல் தானம் வாங்குவதும், பிறருக்காகத் தேவபூஜைசெய்வதும், பிறருக்காகத் திலஹோமஞ் செய்வதும், பிறருக்காக ருத்திரத்தைப் பாராயணஞ்செய்வதும், பிறருக்காகத் தீர்த்தயாத்திரை செய்வதும், பர்த்தாவும் பத்தினியும் தலைமொட்டைசெய்து கொள்ளுவதும், விதவைகளுக்குத் தலையைமொட்டையடிக்காமலிருப்பதும், தலை மொட்டையடித்துக்கொண்டிராத சகேசிகளாகிய விதவைகளின் பர்த்தா சிராத்தத்தில் பிராம்மணார்த்தம் சாப்பிடுவதும் யாகஞ்செய்ய யோக்கியதை இல்லாதவர்களுக்குயாகம் செய்வித்தலும், சூத்திரர்களிடத்தில்போய் அவர்களுக்கு மந்திரோபதேசம் செய்விப்பதும், தேவாலயத்தில் சாப்பிடுவதும ஜாதிப்பிரஷ்டனைக் குருவாகக் கொள்ளுதலும், சுமங்கலிகளுக்கு அவர்களுடைய பர்த்தா இல்லாமல்வேறெவனாவதுமந்திரோபதேசஞ்செய்வதும் காளிமுதலான தெய்வங்களைப் பூஜிக்கும சூத்திரனிடத்தில்விபூதி வாங்கிக்கொள்ளுதலும, சிவத்திவஜனிடத்தில் இருந்துவிபூதி வாங்குதலும், பெருமாள்கோவிலில் தீர்த்தத்தை வாங்கிச் சாப்பிடுவது தோஷமில்லையென்றுசொல்லுவதும், மாந்திரிகனாகியஎல்லாரிடத்திலும் ரக்ஷைகட்டிக்கொள்ளுதலும் அந்த ரக்ஷையை யெப்போதும் பூநூலில் கட்டிக்கொள்ளுவதும், மூத்தாளாகிய பெண்சாதிக்குப் புத்திரனிருக்க இளையவளுக்குப்பிள்ளை பிறக்கவேண்டுமென்றாகப் பிரதிஷ்டை முதலான விரதங்களைச்செய்வதும், வைசுவதேவம் செய்யாமலிருப்பதும் கிராமத்தில் சூத்திரபுரோஹிதம் செய்வித்தலும், துலுக்கன்பறையன் முதலான எல்லாரிடத்திலும் மருந்து வாங்கித்தின்பதும் ஒருவன் சிருத்தத்தில் நிமந்திரணத்துக்குத்தன்னைச்சொல்லவேண்டுமென்று தானேபோய்ச் சொல்லிக்கொள்ளுதலும் நித்தியகர்மானுஷ்டானங்களை விட்டுவிட்டுப்பெருமாளுக்குப் பஜனைசெய்வதும் இதிமுதலான கலிமகாராஜனுடைய காரியங்களைக் கூடியமட்டில் மேற்கண்ட கிரந்தங்களில் எழுதுவோம். மற்றது பின் சுபம்.

[illegible]

சமஸ்கிருதபாஷா
வைத்தியம்
தொடர்பு

வேதத்தில் ஓஷதிகளனைத்தும் நான்குவிதமாக வகுக்கப்பட்டிருக்கின்றன. மாத்தியந்தின சம்ஹிதையில் பலமுடையது, அஃதில்லாதது, புஷ்பமுடையது, புஷ்பமில்லாதது என்று நான்காகக் கூறப்பட்டிருக்கிறது. இங்ஙனமே அதர்வசம்ஹிதையிலும், மற்ற யஜுஸ் ஸம்ஹிதையிலும் வேறு சொல்லால் இதே சித்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதுபற்றி வேதத்திற் சொல்லப்பட்ட இப்பிரிவு வைதிகசிகிற்சையிலுபயோகிக்கப்படுகிறதென்றறிக. காடகத்தில், வீருத் (கொடி) ஓஷதி, (பழமுண்டாகும்வரை இருக்கக்கூடியவைகள்) வநஸ்பதி, (விருக்ஷங்கள்) என்று சொல்லப்பட்ட மூவகையோஷதிகளுள் ஒவ்வொன்றும் நன்னான்குவகைப்பட்டனவாம். பலா, ஆல், அரசு இவைமுதலியன பலமுள்ளனவாம். கரணை முதலியவைகள் பலமில்லாதவைகளாம். நெல்முதலியவைகள், புஷ்பமில்லாதன. மல்லிகை முதலியன புஷ்பமுடைத்தானவைகள். ஓஷதிகளின் பிரிவைக்கூறிய மந்திரம் ஆதர்வணனாகிய பிஷக் (ஆதிவைத்தியர்) கண்டறிந்தாரென மஹீதரர் முதலியோர் கொண்ட கருத்து. ஆகையால் இவ்வைத்தியம் வேதமறிய விதிக்கப்பட்டதென்றேற்பட்டது. அதனாற்றான் எங்கும் பிரசித்திபெற்ற ஆதர்வணரான பிப்பலாத மகரிஷி கர்ப்போபநிடதத்தைப்பிரவசனஞ்செய்தார். அதர்வணஸம்ஹிதையின் சில ஸூக்தங்களும் சிகித்சையிலுபயோகப்படுகின்றன. அங்குள்ள மந்திரங்கள் யாவும் வைத்தியத்திலேயேஉபயோகிக்கப்படுகின்றன. அதனாற்றான் மாத்தியந்தினஸம்ஹிதையில் (27) மந்திரங்களடங்கிய ஓஷதிசூக்தத்தில் (12)மந்திரங்கள்ஸ்ரௌதஸ்மார்த்த கன்மங்களி லொன்றிலாவது உபயோகிக்கப்படவேயில்லை. ஆனதுபற்றியே அவைகள் வைத்தியத்தினங்கமாகவும் உபவேதமூலமாகவுமேற்பட்டுள்ளன. உபவேதமென்றது ஆயுர்வேதமென்று முன்னரே சொல்லப்பட்டது. அம்மந்திரங்களில் வைதிகர்களான மூன்று வர்ணத்தவர்க்கும், அதிலும் முக்கியமாய்ப்பிராமணர்களுக்கே வைத்தியத்திலதிகாரமுண்டென ஸ்பஷ்டமாய்ச்சொல்லப்பட்டிருக்கின்றது. ([illegible]) 'வைத்தியனான விப்பிரன் ரக்ஷஸ்ஸுகளைக் கொல்பவன், பாபத்தைத்தொலைப்பவன்' என்று சொல்லப்படுவான் ([illegible]) எந்த ரோகிக்குப்பிராமணன் எங்களை 'உபயோகிப்பானோ அவனையேநாங்கள் கரையேற்றுவோம்' என்று தங்கள் அரசனாகியசோமனோடுஓஷதிகள் வாதித்தன என்ற மந்திரங்களிலும் சொல்லப்பட்டவிப்ரபிராமணபதங்களால் வைத்தியத்திற்கு அதிகாரி பிராமணனென்றே வெளியாகிறது. ([illegible]) 'ஆகையால் பிராமணன் வைத்தியஞ்செய்யக்கூடாது' என்ற வசன

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

த்திற்குப்பிரகாணத்தால் கருமகாலத்தில் மட்டும் செய்வது கூடாதென்பது கருத்தென்று ஆயுர்வேதாதிகாரி நிர்ணயத்தில் எம்மாற்பிரமாணபூர்வகமாகச் சொல்லப்பட்டிருக்கிறதுபற்றி இங்கு அதை விரிக்கவில்லை. அது பற்றியே ஆசுவலாயனமகரிஷியும் சைத்தியயாகத்தில் ஆரோக்கியத்தை விரும்புவோனுக்குத் தன்வந்திரியாகத்தை விதித்தனர். அங்கு பிரமாவுக்கும் அக்கினிக்கும்நடுவில் நன்னடத்தை பொருந்திய பிராமணரான வைத்தியனை வைத்துக்கொள்ளவேண்டும். அன்றியும் அனேகர் வைசுவதேவத்தில் பூஜிக்கவேண்டிய தேவதைகளுள் ஞத்திரமிபற்றிய தன்வந்திரியையும் பூசித்துவருகின்றனர். ஆகையால் பண்டிதனென பிராமணனுக்குமாத்திரம் ஆயுர்வேதத்தில் முக்கியாதிகாரமுண்டென்றேற்பட்டது. அறிவுடையோரின்சௌகரியத்திற்காக மேவதத்திற்கூறிய சம்பிரதாயப்படி வைத்தியத்தை விரிவாய் நிரூபிப்பாம்.

வரும்

கடிதம்

கடிதகர்த்தர்களின் அபிப்பிராயம்பத்திராதிபரைச்சாரா

வைதிகனும்

லௌகிகனும்

வைதிக சிரத்தை

ஆரியர்காள்!

வைதிகரென்போர் வேதவிதி வழுவாது நடப்பவர் தற்காலத்தில் வைதிகனென்பது வேதத்திற்சொல்லிய வேஷத்தைப்போடுவோரே. அவ்வேஷத்தையும் சரிவரப் போட்டுக்கொள்ளத் தெரியாமல் தம்மனம்போனபடி மயங்கித்திரிகிறார்கள். உண்மையான லோகோபகாரத்தைக் கருதிய ஓர் வைதிகனைக் காண்பது மிக்க அரிதாக இருக்கிறது. இவர்களே இவ்வனம் இருக்கும்போது இவ் விஷயத்தையே யறியாது பாலியம் முதல் நமது மதவரடையும் நமது பாஷைவாடையும் படாது இராஜ பாஷையைப் படித்த மஹான்களின் சிரத்தையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? எதோ ஒருவர் இருவர் வைதிக சிரத்தையுடனிருந்தாலும் அனேகமாய் வைதிக சிரத்தையே குன்றி விட்டது. வேத விசுவாசம் பரந்துவிட்டது. ஆனதினால் இவ்விபரீதத்திற்கு என் செய்வோம். இப்பொழுது நம்மவரில் முழுவதும் புது மாதிரியாக மாறிய ஓர் லௌகிகர் வீட்டில் சிராத்தம் முத

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வியவைகள் வந்துவிட்டால் அங்கு நடக்கும் விபரீதத்தை என்னவென்றியம்புவாம். பாருங்கள்! பரமவைதிகருக்குப் பிறந்த ஒருவரின் வைதிக சிரத்தையை. இவர் ஓர் நல்லமதிப்புள்ள பிரபு. இவர் ஒருநாள் தனது கச்சேரி அறையில் உட்கார்ந்து தனது லௌகீக பிரவர்த்தியில் மனத்தைச்செலுத்திக்கொண்டிருக்கும் சமயத்தில் பஞ்ச கச்சம்கட்டியவரும் நெத்தியில் கோபி சந்தனம் போட்டிருந்தவருமாய் ஓர் அந்தணர் வந்து நின்றார்.

பிரபு. என்ன சாஸ்திரிகளே! இவ்வளவுநாளாய்க் காணோமே உட்காருங்கள்

சாஸ்திரிகள். உங்கள் தெவசத்துக்குத்தானே வரவேண்டும் வருவதற்கு வேறு பிரசக்தியில்லையே ஏதாவது ஸைப்பு இருந்தாற்றானே வரலாம்.

பி. என்ன? ஆனல் சிலவு கொண்டுவந்து விட்டீரா? அது என்றைக்கு?

சா. பதிமூன்றும் தேதி சுக்கிலபக்ஷம் பஞ்சமியன்று லௌ. (May sixteenth) ஓய் அன்றைக்குஎனக்குப் பெரிய கேஸ் ஆயிற்றே என்ன செய்கிறது. எனக்கு அன்றைக்கு மெட்ராசுக்குப் போகவேண்டும். இந்த இழவு இப்பொழுது எங்குவந்து சேர்ந்தது. இந்த foolish Sastry பூலிஷ் சாஸ்திரிகளுக்கெல்லாம் என்ன வேலை. சமயம் தெரிகிறதில்லை- (சு. சு. I. dont care) ஐ டோன் கேர் அஹ. வசியம் நாம் போகவேண்டும். அடுத்த வருஷத்தில் செய்துகொண்டால் என்ன?

சா. ஆனல் பிரபுக்கள் யுக்தப்படி செய்துகொள்கிறது வேலையிருந்துவிட்டால் என்ன செய்கிறது (எங்கிருந்தோ பிரபுவின் தாயார் வந்தாள். அவள் காதில் இவ்வார்த்தை பட

தாய்- என்னடா பிராணதார்த்திஹரா! இப்படிச்சொல்லராய். அவா தெவசம் இல்லையடா இதென்னடா இப்படிப்பண்ணுகிறாய் இது ஆரடா சொல்லிக்கொடுத்தா? தோப்பன் தெவசத்தை விடச்சொல்லி

பிரபு- What ugly vidow - என்ன அபஸ்மார மொட்டச்சி Go out- வெளியே போ.

தாய்- இரண்டு காதையும் பொத்திக்கொண்டு போரும் போரும் நான் போரேன். என்னடி இப்படிப்போய்விட்டான்.

சாஸ்தி- ஆனல் நான் போய்விட்டு வரட்டுமா? Yes- போய்விட்டுவாரும். அவர் போகும்பொழுது அந்தப்புறத்திலிருந்த பிரபுவின் மனைவி ஜன்னல் வழியாகப் பார்த்திருந்து சாஸ்திரிகளே! இங்கு வாரும் என்று அழைத்தாள்.

பி, மனைவி- வாரும் உட்காரும். என்ன தடபுடல்? எங்கு வந்தீர்?

சா- பெரிய எஜமான் சிரார்த்தம் என்று சொல்ல,

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வந்தேன். பண்ணவில்லையென்று சொல்லிவிட்டார்.

பி, மனைவி- ஓய் என்ன உமக்கு சமயம் தெரிகிற தில்லை. கட்டுப்பொட்டி வைதிகந்தானே அப்பம்வடை சாப்பிடுவீர். நல்லதிருக்கட்டும்; என்றைக்கு?

சா- அடுத்த வெள்ளிக்கிழமையன்று.

பி, மனைவி- ஆனல் சரி, நீர் அன்று எட்டுமணி அடித்தவுடன் இங்கு வந்து நிற்கவேணடும். தெரியுமா மந்த தன்மையைவிட்டு சித்தே சீக்கிரம் வந்துடணும் என்ன பண்ணுரது எனக்கு இப்படி வாச்சுது. எங்கே சொல்லி அழுவேன்.

சா- என்ன அம்மா செய்கிறது ? ஜன்மாந்தரத்தில் கொடுத்துவைத்ததுதானே கிடைக்கும். அம்மா நான் போய்விட்டுவருகிறேன். சாஸ்திரிகளவர்கள் போய் விட்டார். பிறகு அம்மாள் தனது உடம்பைச் சிங்காரித்துக்கொள்ளச்சென்ருள். பத்து நிமிஷங்கழித்தவுடன டியர் டியர் என்று ஓர் உரத்த சத்தங்கேட்டது. அம்மாளும் வெகு சீக்கிரமாக கிண் கிண் என்று சிலம்புகள் ஓசையிட, வெகுகெம்பீரமுகத்துடன்பிரபு இருந்தவிடத்திற்குச் சென்ருள். அச்சமயம் பிரபு சாயங்கால வாக்கிங்கு போவதற்கு வேண்டியஉடுப்புகளை போட்டுக்கொண்டு கையில் Bat- (பாட்) ஒரு நரம்பு வலைப்புடி கையில் பிடித்து பந்தடிக்கப் போவதற்கு ஆயத்தமாயிருந்தார். அச்சமயம் பிரபு தன் சம்ஸாரத்தை நோக்கி சில சங்கதி கேட்டார்.

பிரபு- டியர் டியர் நேற்றுச் சொல்லியிருந்தபடியெல்லாம் சௌகரியமாய் செய்துவைக்கிருயா? Friends (வ்ரண்ட்ஸ்களில்) அனேகர் (Table Food) டேபில் பூட்டுக்கு (மேஜை சாப்பாடு) வருவார்கள்- எல்லாம் அந்தப்பயலைக்கொண்டு சரிப்படுத்தி வைத்து விடவேண்டியது.

மனைவி- இது என்ன இது? நீங்கள் துரைவீட்டிலேயே பொறந்தீர்களா? இப்படி இங்கிலீஷ் பாஷை யிருக்ககளே! நாளைக்கு அவாளுக்குத் தெவசமாம்; இப்படியிருக்கலாமோ! எதடி காலம் வாழ்ந்துபோச்சுப்போ-

பிரபு- டியர் டியர் உனக்கு கூட சிரார்த்தம் பண்ண வேண்டுமோ?

மனைவி- எனக்கு சிரார்த்தம் நான் செத்தாய்விட்டு; ஒங்கப்பனுக்குத்தான் இப்போ பண்ணனும்; பெத்தவயத்திலே பெருங்காயத்தை வச்சுக்கட்டிக்கினும். சிவ! சிவ! சிவ! உம்மைப் படிக்க வைக்க எவ்வளவு பாடுபட்டார்? ஹரே ஸ்ரீகிருஷ்ணயநம: என்று ஆமாமா நுழைந்து நுழைந்து புறப்பட்டது நேக்குத் தெரியுமே. அப்

[illegible]

படியெல்லாம் சிரமப்பட்டு காப்பாற்றின அப்பனுக்கு செய்யர காரியம் ரொம்ப நன்ணுயிருக்கு- அங்கே அம்மா வந்து ஒ என்னு அழரா- இங்கிலீஷ் வாசித்தால் இப்படியெல்லாமா பண்ணச்சொல்லியிருக்கு-

பிரபு- என்ன பாரதம் படிக்கிருய்- இதெல்லாம் எப்பொ கத்திக்கொண்டாய்? இந்த அன்ஸிவிலிசேஷனகாரியத்தில் உன் புத்திபோயிற்றே-

மனைவி- என்ன இப்படிச் சொல்ரியள்- பக்ஷிகள்கூடன்னு தன் ஜாதியில் ஏதாவது செத்தால் முழுகுகிறது நம்ம பிள்ளை நமக்கு சாதம் போடவாண்டாமா? இப்படித்தான் உங்க பிள்ளையும் உங்களுக்குசொல்லுவான் விழுந்து விழுந்து ஸ்ரீநிவாஸ சாஸ்திரியள் பிரஸங்கத்தைக் கேட்டேளே- அவர் இப்படித்தான் சொன்னரோ? அவரிடத்தில் பரமவைதிகன்போல் பேசிநகளே இது என்ன இது?(கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு) ஏதடி காலம் இப்படியிருக்கு.

பிரபு- இப்பொழுதுதான் அருகு முளைக்கிறதுபோலேயிருக்கிறது. எனக்கு அன்றைக்கு ஒரு பெரிய கேஸ் ஆயிற்றே- மெட்ராஸ்க்கு போகணுமே என்ன செய்வது?

மனைவி- ஒரு ஓபர் பண்ணிவிட்டுத்தான் இருக்கணும்- இதுக்கின்னு அப்பன் தெவசத்தை விட்டுவிடுகிறதா என்ன?

பிரபு- ஆனல் உன் இழவுக்கு செய்ரேன். இதற்கு என்று வேலையை நிறுத்தவேண்டியிருக்கிறது:

மனைவி- எனக்குஇழவுநான்செத்தாவிட்டு-அவர்கிடக்கார் தேமேனு மூலையிலே- இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு ஐயோ! நல்ல தீக்ஷிதவம்சத்தில்பொரந்து இப்படியா போகணும்- என்ன பண்ணுவேன் நான் பண்ணின பூஜாபலன் இப்படி வாச்சுது- என்ன முட்டிக்கிண்டு என்னபண்ட்றது நல்ல ஆம்படையான் வாய்க்கலாகாதா? (மனதிற்குள்) ச்சி என்ன இப்படிச் சொன்னேன்- நான் சொன்னது தப்பு இல்லையா பதிவிருதைக்கு அழக்கில்லை பாந்தியா.

பிரபு- டியர் என்ன நீயும்இப்படி போய்விட்டாய்? என்ன வருத்தப்படரே- இங்கு வா (என்று கையை பிடித்து மார்போடணைத்துமுத்தங்கொடுக்க போனர்

மனை- தூரவே நில்லும்; எப்பொ கண்டாலும் இப்படித்தான, தெய்வம் ஒண்ணு இருக்கிண்ணு கூட ஞாபகமில்லை- பகலென்னும் ராத்திரின்னும் இல்லை- வர்ஜாவர்ஜமில்லை- கண்டபடியெல்லாம் பேசிக்கொண்டு டியர் என்னவேண்டியிருக்கு? இங்கிலீஷிலேயே பொ

[illegible]

ரந்து இங்கிலிஷிலேயே வளர்த்தீளாயென்ன? அவர்தான் உங்களுக்குத் தான் ஆயிரம்பேர் நடுவில் வைத்து உங்கள்பவுஷைவிரிக்கிறுரே.

பிரபு- சரி.சரி, நான் கிளப்புக்குப் போகவேணும்- ஆனல் நான்ராத்திரி சொன்னது முடியாதோ (ஸெரிமொனிக்கு)வேண்டியதற்கு எல்லாம் சித்தம் செய்து விடச்செய்.

மனேவி- அது நீங்கள் சொல்லவேண்டாம் (வந்த சாஸ்திரிகளை அடித்து துரத்திப்பிட்டு) உங்களுக்கெல்லாம் அந்த சாஸ்திரிகள்தான் வேணும்: நன்ணு சொல்லாமல் சொல்வார்.

பிரபு- நான் போய்வருகிறேன்- எல்லாம் சரியாகச் செய்துவைக்கச் சொல்லவேண்டியது. ஆனல் முடியாதாக்கும்- இருக்கட்டும் என்று ஐபாவர்கள் பந்தடிப்பதற்குப்போய்விட்டார்- இங்கு மனேவியும் தனது அறையில்போய் இருந்துகொண்டு பாமேசுவரியைக்குறித்துப் பிரார்த்திக்கத்துடங்கினள்- மாதங்கி மனேன்மணி மஹேசுவரி மங்களநாயகி எப்படியாவதுநல்லஸ்திதியில் கொண்டுவரமாட்டாயா? எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது- பெரியவாள் பேருக்கு அபகீர்த்தி வரும்போலே இருக்கே- அந்தத் தடியன்வந்ததுமுதற்கொண்டே இப்படி ஆரம்பித்துவிட்டாரே என்னமோ சொல்லுகிருளே அப்படி ஆயிடுமோ என்னமோஎன்தாயே! உன்னைத்தான்நம்பிக்கிண்டுஇருக்கேன் எப்படியாவது நல்லபுத்திவரவேண்டும்! அடி கல்யாணி குழந்தை எங்கேடி? அவளே இங்கு கொண்டுவா என்று கண்ணீர்சொரிய நின்றுள்.

குழந்தை- அம்ம என்ன! ஏண்டி அழுதுகொண்டிருக்கே?

தாய்- என்னமோ என்தலைவிதி இப்படி வருத்தப்படும்படியாயிருக்கு உன்முகத்திலாவது முழித்துச்சந்தேஷப்படவேண்டித்தானிருக்கு-

வரும்

[illegible]

ஆசாரசீர்திருத்தக்காரர்களும் அவர்கள்சீர்திருத்தமும்

மேற்றிசைக்கு மேற் சொல்லிய குணங்களனைத்தும் பொருந்திய ஒருவர் செல்ல நேரிடுமாறால் இவ்வளவும் அத்தேசங்களிற் பொருந்தியிருக்குமா? தேசமென்பது: நல்ல சமமானபூமியும், அவர்கள் தேகத்துக்கு வசிக்க யோக்கியமுமான இடம், நீர்வளம், நிலவளம் இவைகள் தேசத்தைச் சேர்ந்தவை. சீதோஷ்ணஸ்திதி: நம்நாட்டுச் சீதோஷ்ணஸ்திதியைத் தாங்கி அதற்குத் தகுந்த உடை நடையுடனும் அதற்குத் தகுந்த ஆகாரத்துடனும் அதற்குத் தகுந்த பிராதஸ்நான முதலிய ஆசாரங்களுடனும் ஆன்னிகப்படி காலமுதல் மாலைவரையில் செய்யும் கர்மாக்களுடனும் இருக்கப்புறத்தேசத்தில் முடியுமா? சௌக்கியமென்பது: சுகரூபமாய்வந்தது. சுகமாவது மனது திருப்தி அடைதல். ஒரு மனிதன் இயற்கையாக இருந்தவிடத்தில் இருக்கிற சுகம் இதர தேசங்களிலுண்டாகுமா? வாசஸ்தலம்: நமதாசாரத்துக்கேற்க கட்டியது புற நாட்டில் கிடைக்குமா? காருண்யம்: நம் நாட்டவரிடத்தில் இருக்கும் சரீரத்தோடு கூடப்பிறந்த ஜீவகாருண்யத்தோடு அங்கு இருக்க முடியுமா? சத்ஸங்கவர்சம் ஜீவகாருணியத்தோடும் சாதுக்களுமான சத்துக்கள் அங்கு கிடைப்பார்களா? உண்மையாக எந்த நாஸ்திகன் கத்தியைக் காட்டிக் கொல்லட்டுமா? தெய்வ நம்பிக்கையைவிடுகிறாயா என்று கேட்டாலும் கொல்லத்தலையை நீட்டக்கூடிய அவ்வளவு தெய்வநம்பிக்கையும் எக்காரியத்தைத்தொட்டாலும் தெய்வத்தை எண்ணிச் செய்தல் முதலிய பெருத்த குணங்கள் அங்கு நடக்குமா? பரலோக விசுவாசம்: கனவிலும் பரலோகமென்பது ஒன்றுண்டு. நமது தேகம் சதமல்ல, நமது மக்கள் சதமல்ல, நமது தாய் சதமல்ல, நமது தகப்பன் சதமல்ல, நாம் அடையவேண்டியது மோக்ஷபதவியே நிச்சயமானதால் அதை அடைய வழி தேடவேண்டுமென்ற பூரணமான நம்பிக்கையுடன் அங்கு இருக்க முடியுமா? வேதம் அநாதி; அதில் சொல்லியதெல்லாம் தெய்வரூபமாய் இருக்கிறதென்று பூரண நம்பிக்கையுடன் அங்கிருத்தல் ஆகுமா? இப்படியெல்லாம் ஏன் அங்கு இருக்க முடியாதென்றால் அநேக தேசங்கள்பனிக்கட்டியால்நிறைந்திருக்கும். அநேக தேசங்கள் அக்னிமலையால் சூழப்பட்டிருக்கும் அநேக தேசங்களில் சூரியனைக் காணுவதே அரிதாயிருக்கும். அநேகவிடங்களில் குளிர் மிகுதியால் காலையில் வெளிவரவே முடியாது. அநேக இடங்களில்கொடிய காற்று வீசிக்கொண்டேயிருக்கும். தேசமோ காடுமேடுபள்ளமும் பாலைவனமும் நிறைந்திருக்கும். மற்றும் எது எது நம் தேசத்துக்கு உதவாதோ அவைகளெல்லாம் அங்கு நிறைந்திருக்கும். சீதோஷ்ணஸ்திதியோ சொல்லவேண்டுவதில்லை. குளிர்ச்சி மிகுந்த நாடு சிலவிடங்களில் உஷ்ணம் மிகுந்திருக்கும் நம் நாட்டைப் போல சமரசமாக மனிதர் வாழ ஒரு இடமுமில்லையென்று மகத்துக்கள் கூறியிருக்கிறார்.

[illegible]

கள். ஆகாரமோ அத்தோ! நம் நாட்டில் அகப்படுவதனோல் சாத்விகம், ராஜசம், தாமசம் முதலிய குணங்களை வகுத்த ஆகாரங்கள் அங்கு கிடைக்குமா? இந்த ஆகாரத்தைச் சாப்பிட்டாலும் ஒயின் சாராயம் முதலியதைக் குடியாவிடில் ஜீர்ணமாகாது. இத்தேசத்தைப்போல் நமக்கு நல்ல ஆசாரம் சிறிதும் கிடைக்காது. அத்தேசத்தில் ஆசாரமென்பது அத்தேசத்தில் நடக்கும் ஆசாரமே. நம் நாட்டவர் ஆசாரத்திற்கும் அதற்கும் வெகு தாரதம்மியமுண்டு, ஸ்நானமென்பது எப்பொழுதோ. ஒருநாளைக்குத்தொட்டியில்தண்ணீரைவைத்து (அப்படியும் இப்படியும்) அலம்பிக்கொள்வதே அங்கு நம்மவர் ஆசாரம் சிறிதும் நடவாது; நடத்தினாலும தேசத்துக்கு ஒத்துவராது. சௌக்கியம் நம் நாட்டவருக்கு அத்தேசம் சிறிதும் சுகத்தைக்கொடுக்காது. சுகமென்பது எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டிருப்பது. அதில் தேசம் முதலியவைவெயலாம் ஒத்திருந்தாலன்றிச் சுகமாயிருக்குமென்று சொல்லமுடியாது. இவ்விருந்து மனசு ஒத்துப்போய்விட்டால் அவனுக்கு அது சுகந்தானேயென்றால், ஆம் வாஸ்தவந்தான். அவன் எங்களுக்கும் பிரஷ்டனே. அவர்களோடு கட்டிப் புரண்டுருண்டுவிட்டு நம்மிடத்து வந்தால் நாமும் அவர்களோடு பழகவேண்டுமோ? வாசஸ்தலமோ நம் இடங்களைப்போல விலாசமும் நமது ஆசாரத்திற்கும் ஒத்த இடமாகவும்இராது. சத்சகவாசமில்லை. சத்துக்களென்றால்யார்? தயை, அடக்கம், கோபமின்மை அழுக்காறு இல்லாமை முதலிய குணங்கள் அற்றவர்களும் வேதநம்பிக்கைமுதலியவைகளுடையவர்களே. அப்பேற்பட்டவர்கள் அங்கு எங்கு தேடினாலும் அகப்படமாட்டார்கள். அத்தேசத்தாரிடத்தில் ஜீவகாருண்யம் என்பது அவ்வளவாக இல்லை. அங்கு ஆகாரம் சாப்பிட வேண்டுமானால் எந்த ஜீவனை வதைத்தாவது தான் சாப்பிடவேண்டிவரும், தெய்வநம்பிக்கை நம் தேசத்தவர் நம்பிக்கைபோல் அவர்கட்குண்டா? இல்லவேயில்லை. நாஸ்திகர் தவிர மற்றவர் எல்லோரும் உண்டென்று நம்புகிறார்கள். அந்த ஒரு நம்பிக்கைமாத்திரம் போதாது. நம்மவர் நம்பிக்கையைப்போல் அவர்களிடத்துண்டா? சிறிதும் இல்லை. பரலோக விசுவாசம் வேதநம்பிக்கை இதைப்பற்றிப்பேசுவதற்கே இடமில்லை. அவர்களுக்கு இந்தமாதிரி நம்பிக்கை வருவதற்கே வழியில்லை. ஆனதினால் நம்மவருக்கு எந்தவிதத்திலும் முற்றும் அங்குபோவதற்கு முரணாயிருக்கிறது. இதையெல்லாம் ஒன்றும் பார்க்காமல் வேறொன்றைப்போலப் புறதேச சஞ்சாரத்திற்சென்று வந்தவனாகிய பாமரனைப் போகிறவர்களைப்பற்றிப் பேசவேண்டுவதேயில்லை. அவர்களை எங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளவும் மாட்டோம். அவர்கள் எங்கள் குலத்தைத் தலைக்கவந்த துரோகிகளென்று அவர்களுக்காக ஒரு பானையைப் பொத்தென்றுபோட்டுடைத்துக் கடச்சிரார்த்தமும் செய்துவிடுவோம். அதைத் தவிர வேறு வழி செய்யமுடியாது. லோகத்துக்கு ... உபகாரங்களைச் செய்யக்கூடிய ஓர் பேருபகாரி போகவேண்டியது அத்தியாவசியமானால் அவனையும் அப் பிரஷ்டர்களிலொருவராக நாம் கூட்டிக்கொண்

[illegible]

ஆசாரசீர்திருத்தக்காரர்களும் அவர்கள்சீர்திருத்தமும்

மேற்றிசைக்கு மேற் சொல்லிய குணங்களனைத்தும் பொருந்திய ஒருவர் செல்ல நேரிடுமானால் இவ்வளவும் அத்தேசங்களிற் பொருந்தியிருக்குமா? தேசமென்பது: நல்ல சமமானபூமியும், அவர்கள் தேகத்துக்கு வசிக்க யோக்கியமுமான இடம், நீர்வளம், நிலவளம் இவைகள் தேசத்தைச் சேர்ந்தவை. சீதோஷ்ணஸ்திதி: நம்நாட்டுச் சீதோஷ்ணஸ்திதியைத் தாங்கி அதற்குத் தகுந்த உடை நடையுடனும் அதற்குத் தகுந்த ஆகாரத்துடனும் அதற்குத் தகுந்த பிராதஸ்நான முதலிய ஆசாரங்களுடனும் ஆன்னிகப்படி காலைமுதல் மாலைவரையில் செய்யும் கர்மாக்களுடனும் இருக்கப்புறத்தேசத்தில் முடியுமா? சௌக்கியமென்பது: சுகரூபமாய்வந்தது. சுகமாவது மனது திருப்தி அடைதல். ஒரு மனிதன் இயற்கையாக இருந்தவிடத்தில் இருக்கிற சுகம் இதர தேசங்களிலுண்டாகுமா? வாசஸ்தலம்: நமதாசாரத்துக்கேற்ககட்டியது புறநாட்டில் கிடைக்குமா? காருண்யம்: நம் நாட்டவரிடத்தில் இருக்கும் சரீரத்தோடு கூடப்பிறந்த ஜீவகாருண்யத்தோடு அங்கு இருக்க முடியுமா? சத்ஸகவாசம் ஜீவகாருணியத்தோடும் சாதுக்களுமான சத்துக்கள் அங்கு கிடைப்பார்களா? உண்மையாக எந்த நாஸ்திகன் கத்தியைக் காட்டிக் கொல்லட்டுமா? தெய்வ நம்பிக்கையைவிடுகிறாயா என்று கேட்டாலும் கொல்லத்தலையை நீட்டக்கூடிய அவ்வளவு தெய்வநம்பிக்கையும் எக்காரியத்தைத்தொட்டாலும் தெய்வத்தை எண்ணிச் செய்தல் முதலிய பெருத்த குணங்கள் அங்கு நடக்குமா? பரலோக விசுவாசம்: கனவிலும் பரலோகமென்பது ஒன்றுண்டு. நமது தேகம் சதமல்ல, நமது மக்கள் சதமல்ல, நமது தாய் சதமல்ல, நமது தகப்பன் சதமல்ல, நாம் அடையவேண்டியது மோக்ஷபதவியே நிச்சயமானதால் அதை அடைய வழி தேடவேண்டுமென்ற பூரணமான நம்பிக்கையுடன் அங்கு இருக்க முடியுமா? வேதம் அநாதி; அதில் சொல்லியதெல்லாம் தெய்வரூபமாய் இருக்கிறதென்று பூரண நம்பிக்கையுடன் அங்கிருத்தல் ஆகுமா? இப்படியெல்லாம் ஏன் அங்கு இருக்க முடியாதென்றால் அனேக தேசங்கள்பனிக்கட்டியால்நிறைந்திருக்கும். அனேக தேசங்கள் அக்னிமலையால் குழப்பட்டிருக்கும் அனேக தேசங்களில் சூரியனைக் காணுவதே அரிதாயிருக்கும். அனேகவிடங்களில் குளிர் மிகுதியால் காலையில் வெளிவரவே முடியாது. அனேக இடங்களில் கொடிய காற்று வீசிக்கொண்டேயிருக்கும். தேசமோ நாடுமேடு பள்ளமும் பாலைவனமும் நிறைந்திருக்கும். மற்றும் எது எது நம் தேசத்துக்கு உதவாதோ அவைகளெல்லாம் அங்கு நிறைந்திருக்கும். சீதோஷ்ணஸ்திதியோ சொல்லவேண்டுவதில்லை. குளிர்ச்சி மிகுந்த நாடு சிலவிடங்களில் உஷ்ணம் மிகுந்திருக்கும் நம் நாட்டைப் போல சமரசமாக மனிதர் வாழ ஒரு இடமுமில்லையென்று மகத்துக்கள் கூறியிருக்கிறார்.

[illegible]

கள். ஆகாரமோ அக்தோ! நம் நாட்டில் அகப்படுவதுபோ
ல் சாத்விகம், ராஜசம், தாமசம் முதலிய குணங்களை வகு
த்த ஆகாரங்கள் அங்கு கிடைக்குமா? இந்த ஆகாரத்தைச்
சாப்பிட்டாலும் ஒயின் சாராயம் முதலியதைக் குடியாவி
டில் ஜீர்ணமாகாது. இத்தேசத்தைப்போல் நமக்கு நல்ல
ஆசாரம் சிறிதும் கிடைக்காது. அத்தேசத்தில் ஆசாரமெ
ன்பது அத்தேசத்தில் நடக்கும் ஆசாரமே. நம் நாட்டவர்
ஆசாரத்திற்கும் அதற்கும் வெகு தாரதம்மியமுண்டு, ஸ்நான
மென்பது எப்பொழுதோ. ஒருநாளைக்குத்தொட்டியில்தண்ணீ
ரைவைத்து (அப்படியும் இப்படியும்) அலம்பிக்கொள்வதே
ஆங்கு நம்மவர் ஆசாரம் சிறிதும் நடவாது; நடத்தினாலும்
தேசத்துக்கு ஒத்துவராது. சௌக்கியம் நம் நாட்டவரு
க்கு அத்தேசம் சிறிதும் சுகத்தைக்கொடுக்காது. சுகமென்
பது எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு இருப்பது. அதில்
தேசம் முதலியவையெலாம் ஒத்திருந்தாலன்றிச் சுகமாயிரு
க்குமென்று சொல்லமுடியாது. இவ்விருந்து மனசு ஒத்துப்
போய்விட்டால் அவனுக்கு அது சுகந்தானேயென்றால், ஆம்
வாஸ்தவந்தான். அவன் எங்களுக்கும் பிரஷ்டனே. அவ
ர்களோடு கட்டிப் புரண்டுருண்டுவிட்டு நம்மிடத்து வந்தால்
நாமும் அவர்களோடு பழகவேண்டுமோ? வாசஸ்தலமோ நம்
இடங்களைப்போல விலாசமும் நமது ஆசாரத்திற்கும் ஒத்த
இ[illegible]மாகவும் இராது. சத்சகவாசமில்லை. சத்துக்களென்றால் யார்?
தயை, அடக்கம், கோபமின்மை அழுக்காறு இல்லாமை
முதலிய குணங்கள் அற்றவர்களும் வேதநம்பிக்கைமுதலிய
வைகளுடையவர்களே. அப்பேற்பட்டவர்கள் அங்கு எங்கு
தேடினாலும் அகப்படமாட்டார்கள். அங்கே சத்து ரிடத்தில்
ஜீவகாருண்யம் என்பது அவ்வளவாக இல்லை. அங்கு ஆகா
ரம் சாப்பிட வேண்டுமானால் எந்த ஜீவனை வதைத்தா
த்தான் சாப்பிடவேண்டிவரும், தேவ நம்பிக்கை நம தேச
த்தவர் நம்பிக்கைபோல் அவர்கட்குண்டா? இல்லவேயில்லை.
நாஸ்திகர் தவிர மற்றவர் எல்லோரும் உண்டென்று நம்பு
கிறார்கள். அந்த ஒரு நம்பிக்கைமாத்திரம் போதாது. நம்ம
வர் நம்பிக்கையைப்போல் அவர்களிடத்துண்டா? சிறிதும்
இல்லை. பரலோக விசுவாசம் வேதநம்பிக்கை இவைப்பற்
றிப்பேசுவதற்கே இடமில்லை. அவர்களுக்கு இந்தமாதிரி நம்
பிக்கை வருவதற்கே வழியில்லை. ஆனதினால் நம்மவரு
க்கு எந்தவிதத்திலும் முற்றும் அங்குப்போவதற்கு மாறா
யிருக்கிறது. இதையெல்லாம் ஒன்றும் பார்க்காமல் தேவ
ரீரைப்போலப் புறதேச சஞ்சாரத்திற்சென்று வைவா
ளர்த்த பாமரனைப் போகிறவர்களைப்பற்றிப் பேசவேண்டுவ
தேயில்லை. அவர்களை எங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொ
ள்ளவும் மாட்டோம். அவர்கள் எங்கள் குலத்தைத் தலைக்
கவிழ்த்த துரோகிகளென்று அவர்களுக்காக ஒரு பானையைப்
பொத்தென்றுபோட்டுடைத்துக் கடச்சிரார்த்தமும் செய்து
விடுவோம். அதைத் தவிர வேறு வழி செய்யமுடியாது.
லோகத்துக்குச் [illegible]க்க உபகாரங்களைச் செய்யக்கூடிய ஓர் பே
ருபகாரி போகவேண்டியது அத்தியாவசியமானால் அவனை
யும் அப் பிரஷ்டர்களிலொருவராக நாம் கூட்டிக்கொண்

[illegible]

டாலும் அவர்களிடத்தில் தேசோபகாரியென்றவிசுவாசத்தை மறக்கமாட்டோம். முக்கியமாக அத்தேசத்துக்கும் நம்மவருக்கும் ஒரு விஷயத்திலும் ஒற்றுமை யுண்டாகாது. இற்க. விதவைகளை மணம் செய்வித்தலைப்பற்றி இன்று நாம் புதிதாகப்பேசவேண்டுவதில்லை, எவ்வளவோ சிம்மங்களால் பேசப்பட்டுக்கிடக்கிறது. அவ் வழக்கு இன்னும் முடிவுபெறவில்லை, அவர்கள் விடார்கள் இவர்களும் விடார்கள். அதில் கம்முறைப்பாடு யாதெனின், எங்கள் விதவைகளை நாங்கள் சன்னியாசிகளாக நினைக்கவேண்டி யிருக்கிறது. அவர்கள் ஜென்மாந்தரத்தில் செய்தபயனை அவர்களனுபவிக்கிறார்கள். பதி விருதையின் இலக்கணம் யாது, அக்கினி சாட்சியாகவும் தேவதைகள் சாட்சியாகவும் பிராம்மண சமூகம் சாட்சியாகவும் செய்த பிராம்மம் முதலிய பிராம்மணர்கட்குரிய விவாகம் செய்து பாவியத்திலோ எப்பொழுதோ புருஷன் இறந்துவிட்டால் அவள் மறுமணஞ்செய்துகொள்வது உண்மையான பதிவிருதைகளுக்கிலக்கணமாகாது. அவர்களைநாங்கள் தலைமொட்டையடிக்கவேண்டாம். நாங்களாக அவர்களைவேறுவிதமாகச்செய்யவேண்டாம். உண்மையான பதிவிருதை சிறுபெண்ணாயினும் அவளே உடனே அவ்வேஷத்தில்மாறி தன்பதியே தெய்வமெனும் விசுவாசத்துடன் இனி தான் அடையவேண்டிய நற்பதவியைக் கவனிப்பாள். இப்பொழுது பதியினிடத்துப் பிரியமுள்ள எவ்வளவோ ஸ்திரீகள் பதியைவிட்டுப் பிரிதலைப் பொறுக்கலாற்றாது எப்படியோ தற்கொலைசெய்துகொண்டு பிராணனை விட்டுவிடுகிறார்கள். அது பதியினிடத்துள்ள விசுவாசத்தாலல்லவோ பதியே தெய்வமென எண்ணுவது எங்கள் ஆரியகுலவதிகளுக்குக் கூடவே பிறந்த இலக்கணம். அக்குணங்கள் மாறிக் காமம்மிறித் தடித்தனம் மிகுந்து கெட்டலையும் வேசைகளை நாங்கள் எங்கள் கூட்டத்திலிருந்தகற்றி விடுவோம். எங்கள் விதவைகளுக்கு நாங்கள் கொடுக்கும் ஆகாரம் முதலியவையெல்லாம் எவ்வளவு சத்வகுணமுடையதென்று நினைக்கிறீர்கள். உண்மையான பதி விசுவாசமும்வேத விசுவாசமும் ஆரிபாசாரத்தில் அன்புமுள்ள ஒருவிதவையானவள் தன்பதி போய்விட்டானே, இனி இம் மயிர் இருந்தென்ன பிரயோஜனம், நாம் அழகாக இருப்பது யாருக்குப் பிரியம், நாம் அப்படியிருப்போமானால் பிறபுருஷன் பார்த்து மோகிக்க இடமுண்டு, ஆனதால் நாம் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டுச் சந்நியாசியைப்போல் நமது பதி யடைந்த மோக்ஷத்தைய டைய வழிதேடுவோமென்று "[illegible]" மிக்க வைராக்கியத்துடன் நற்சிந்தையோடு இருப்பாள். அப்படியில்லாது கெட்ட பழக்கத்திற்கு இடமுண்டானால் கூடியவரையில் கண்டித்துப் பார்ப்போம். முடியாவிடில் விலக்கிவிடுவோம். ஆனதினால் எங்கள் குலதெய்வங்களாகிய பதிவிருதைகளை நாங்களொருநாளுங் கைவிடோம். அவர்களை அம்பலத்தில் இழுத்துவையோம். இவ் விஷயத்தில் வீணில் இடத்தை அடைப்பதில் பிரயோஜனம் இல்லையாயினும் நாம் இவ் வருஷமும் பேச வேண்டியது முறையாதலால் பேசினோம். சுபம்.

ஆஸ்திகநாதன்.

சித்தாச்சிரமம்.

[அடியில் வரும் விருத்தாந்தமானது இரண்டு சந்நியாசிகளால் வெளியிடப்பட்டது. அவர்களில் ஒருவர் பாபு ப்ரமோதநாத முகர்ஜீ எம். ஏ. இவர் இப்பட்டம் பெற்றது ஆக்ஸ்போர்டு யூனிவேர்ஸிட்டியில். இவர் அனேக வருஷங்களாக இவ்வுலகவாழ்க்கையைத் துறந்து மதக் கோட்பாடுகளைத் தழுவினவராய் சந்நியாசத்தைக் கைக்கொள்ள ஆவலாயிருந்தார். ஹிமோத்பருவதத்தின் கொடு முடிகளாகிய கிஞ்சின் ஜிங்கா தவளகிரியென்னும் இரண்டிற்கும் இடையில் இருக்கிற சித்தாச்சிரமத்தை இந்த ப்ரமோதநாதர் மற்றொருவருடனே போய்ப்பார்த்தார்.]

ஹிமோத் பருவதத்தின் அடிவாரத்தில் சிக்கிம், பூடான் என்ற நாடுகளின் தென்பக்கத்தில் நாமர் பஜார் என்ற பெரிய சந்தையொன்றிருக்கிறது. சுற்றுப் பக்கத்திலுள்ள மலைப்ரதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் அந்தச்சந்தைக்கு வந்து சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டுபோவது வழக்கம். பிரதி வருஷமும் கார்த்திகை பங்குனிமாஸங்களில் ஹிமோத்பருவதத்திலிருந்து யோகிகள் கூட்டமாய் இந்தச்சந்தைக்குவருவார்கள். இச்சந்நியாசிகள் ஐம்பது அறுபது பேராகவந்து அரிசி நெய்முதலிய சாமான்களை வாங்கிக்கொண்டுபோவார்கள். இந்தச்சாமான்களைத் தங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வதுமல்லாமல் தற்செயலாய்ச் சித்தாச் சிரமத்தில் வந்து தங்கும் அதிதிகளுக்கும்கொடுத்து உபசரிப்பார்கள். கீழேவந்த சந்நியாசிகள் இரண்டு ஒருநாளில் தங்கள்காரியத்தை முடித்துக்கொண்டுமேலேயேறி தங்கள் இருப்பிடத்திற்கு அதிவேகமாய்ச் செல்வார்கள். தங்களுடன் யாராவது அந்நியர்கள் வந்துவிடுவார்களென்றெண்ணி, ஒருவரும் தங்களைப் பின்தொடர்ந்து நடக்கமுடியாத அவ்வளவு விரைவாகச் செல்வார்கள்.

முற்கூறிய இரண்டு சந்நியாசிகள் மற்றவர்களுடன் தக்ககாலத்தில் நாமர்பஜாருக்குப் போய் சித்தாச்சிரம யோகிகள்வரவை வெகு ஆவலாய் எதிர்பார்த்திருந்தார்கள். இப்படி இருக்கையில் ஒருநாள் இவர்கள் எதிர்பார்த்திருந்தபிரகாரமே சித்தாச்சிரம யோகிகள் ௫௰-௬௰ பேர்கள் ஒருகூட்டமாய் நாமர் பஜாருக்குவந்து தங்களுக்கு வேண்டியசாமான்களை வாங்கிக்கொண்டு தங்கள் ஆச்சிரமத்தை நோக்கிவெகு விரைவாய்ச்செல்ல ஆரம்பித்தார்கள். பாபுப்பிரமோதநாதரும் அவருடன்போயிருந்த சிலரும் அவர்களை வெகு ஜாக்கிரதையாய்ப் பின்றொடர்ந்தார்கள். ஆனால் பிரயோஜனம் இல்லாமற்போயிற்று. யோகிகள் வெகு விரைவாய்நடந்ததினால் ௰ மயில் தூரம்போகிறதற்குள்ளாக அனேகர் ஒவ்வொருவராகப் பின்னால் நடக்கமுடியாமல் நின்றுவிடவேண்டியதாய் நேரிட்டது. ஆனால் நாம் முன்சொன்ன இருவர்மட்டுமே அவர்கள் பிரயாணமுடிவுமட்டும் சென்றார்கள்.

நாமர் பஜாருக்கும் சித்தாச்சிரமத்திற்கும் மலைப்பாதையாயுள்ள தூரமானது ஐந்துநாள் பிரயாணமுள்ளது. அடிவாரத்திலிருந்து 37 மயில்தூரம்வரைக்கும் மனிதர்வசிக்கும் வீடுகளை இங்கும் அங்குங்கூடக்காண்பதரிது. மேலே போகப்போக மேகமண்டலத்திற்கும் மேலே என்றுங் கரையாத பனிக் குவியல்கள் படிந்திருக்கின்றன. இவை யெல்லாம் ஹிமோத் பருவதத்தின் ஏகாந்தத்திற்கு ஒரு கம்பீரத்தையும் அழகையுங் கொடுக்கின்றன. கற் பிளப்புகளினின்றும் அனேக ஓடைகள் கிளம்பி சப்தம் செய்துகொண்டு அதிவேகத்துடன் இங்கும் அங்கும் மலை அருவிகளாக ஓடுகின்றன. வருஷத்தில் ஒருதடவைகூடச் சூரியரஸ்மியேபடாத அனேக இடங்களின் வழியாய் யோகிகள் சென்றார்கள். ஆயினும் அடிக்கடி மாலைவெளிச்சம் அந்தப் பயங்கரமான தோற்றத்தை மாற்றும். அம்மலை ப்ரதேசத்திலுள்ள தவ்டஜெந்து வெள்ளைக் கபடி ஒன்றுதான். அதிக குளிர்ச்சியான இடங்களில் போகும்போது ஒவ்வொரு சந்நியாசியும் பனியை விலக்கிக்கொண்டு போகும்படியாகத் தங்கள் கையில் ஒரு தீப்பந்தம் வைத்துக்கொள்வார்கள். இராத்திரி காலங்களில் மரத்தடியிற்றங்கி உலர்ந்த சருகுகளையும், கட்டைகளையும் எரித்துத் தீய்க் காய்வார்கள். மலைகளிலுள்ள பழவர்க்கங்களைத்தின்று அங்கிருக்கும் ஊற்றிலுள்ள மதுரமான ஜலத்தைக்குடித்துப் பசிதாகாதிகளைத் தீர்த்துக்கொள்வார்கள். அதிக ஆழமில்லாத நதிகளைக் காலால் நடந்து கடப்பார்கள். அதிக ஆழமானால் மரப்படவுகளால் கடந்து செல்வார்கள். அவர்கள் செல்லுங் காலத்தில் கணக்கிலடங்காத சிறு நதிகளைக் கடந்ததுமன்றி, பெரிய நதிகள் இரண்டையும் கடந்தார்கள். ஹியாகோ (Hiyoka) என்னுமிடத்தில் அந்தச் சந்நியாசிகள் ஒரு வரிசையாய்ச் செல்லவேண்டியிருந்தது. மேகங்கள் எட்டும்படியிருந்ததால் அவர்களெல்லாரும் நனைந்துபோனார்கள். கடைசியாகப் பரிசுத்தமான கங்கா நதியின் உற்பத்தி ஸ்தானங்களில் ஒன்றைப்போய்ச் சேர்ந்தார்கள். அதின் எதிர்க்கரையில்தான் சித்தாச்சிரமம் இருக்கிறது. இந்த இடத்தில் கங்கைக்கு மந்தாகினி என்று பெயர். இந்த மந்தாகினியைத் தாண்டித் தங்களது இருப்பிடமாகிய சித்தாச்சிரமத்திற்குவந்து சேர்ந்தார்கள். இந்த ஆச்சிரமம்மேகமண்டலத்திற்கும்மேலே அதிகமாய் உயர்ந்திருக்கின்றது. சித்தாச்சிரமத்திற்கும் நாமர் பஜாருக்கும் மலைச்சாய்விற் பார்த்தால் சுமார் ௧௪-மயில்தூரமிருக்கிறது.

இந்த யோகிகளைப் பின்தொடர்ந்துபோன இரண்டு சந்நியாசிகளில் ஒருவர் ப்ரமோதநாதர், எம்.ஏ. சித்தாச்சிரமத்திற்குள்ளே எல்லோரும் போகக்கூடாது. அதற்குவெளியே, வந்த பிரயாணிகள் தங்குவதற்கு ஒருஇடமிருக்கிறது. பிரமோதநாதர் ஆச்சிரமத்திற்குள்வர அச் சந்நியாசிகள் சம்மதிக்காமல் அவரை வெளியிலேயே இருக்கச் சொல்லி உள்ளே போய் தங்கள் குருவின் உத்தரவைக் கேட்டுக்கொண்டு வருவதாகச் சென்றார்கள்.

ஸித்தாச்ரமத்திற்குள் வீடுமுதலியனவை ஒன்றுமில்லை. அது மேகமண்டலத்தையுங் கடந்து அதிக உயரமாக இருக்கிறதினால் அங்கு மழை பெய்யுமென்கிற பயம் இல்லை, வெயிலின் உக்கிரகத்தை ஹிமோத்கிரியின் குளிர்ந்தகாற்றானது சாந்தப்படுத்துகிறது. இக்காரணங்கள்பற்றி அவ்விடத்தில் வீடுமுதலியன கட்டவேண்டியது ஆவசியகம் ஏற்படவில்லை. சில யோகிகள் மரத்தின் நிழலிலும் சிலர்குகைகளிலும் மற்றவர்கள் இரவும் பகலும் சுவாலையாயிருக்கிற எட்டு ஹோம குண்டங்களில் ஏதாவது ஒன்றின் பக்கத்திலும் வசிக்கின்றார்கள்.

ஸித்தாச்ரமத்தில் ஒரு புத்தகசாலை யிருக்கிறது. இயற்கையாய் ஏற்பட்டுள்ள இரண்டு கற் சுவர்களின்மீது கிஞ்சின்ஜிங்கா (Kinchinjiuga) என்னுங் கொடுமுடியினின்றும் சாய்வாகவந்து ஒரு கற்பாறை தங்கியிருக்கிறது. அது ஒரு அறைபோன்று இருக்கிறது. இவ் வறைக்குள் தேவநாகிரி அட்சரத்தில் எழுதியதொன்மையான ஸம்ஸ்கிருத கிரந்தங்களின் கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றன.

அனேகமலை விருக்ஷங்களோடும் மூலிகைகளோடுங் கூட நாம் புஸ்தகமூலமாய்க் கேட்டிருக்கிற சோமவிருக்ஷம் காடாயிருக்கிறது. அதின் இலைகள் வெற்றிலையைப் போலிருக்கின்றன. இந்த உத்கிருஷ்டமான செடியின் ரசமானது சாப்பிட்டால் லாகிரிவஸ்துக்களைப்போல் மயக்கத்தை உண்டுபண்ணுகிறதில்லை. ஆனால் சாப்பிடுவோர்க்கு ஒருவிதமான பத்திவை உண்டுபண்ணிச் சொல்லமுடியாத ஆனந்தத்தையும் உண்டுபண்ணுகிறது. யோகிகள் அரிதாகிய அம்லாகி யென்னும் பழங்களைச் சாப்பிடுகிறார்கள். அவர்களிற் சிலர் நெய் சாப்பிடுகிறார்கள். அவர்களது பானமோ தெளிந்த குளிர்ந்த மலைஅருவிச் சலந்தான்.

ஸித்தாச்ரமத்து யோகிகள் அதி காலையில் எழுந்திருந்து மந்தாகினியில் ஸ்நானஞ்செய்துவிட்டுப் பிறகு சாஸ்திர விதிப்படி யக்யாதிகிருத்தியங்களைச் செய்து வேதங்களையும் உபநிஷத்துகளையும் எல்லாருஞ் சேர்ந்து உரக்கப்பாராயணம் பண்ணுகின்றார்கள். சிலர் கிழங்கு முதலியவைகளையும் மற்றும் சிலர் தண்ணீரையுமட்டுமே சாப்பிடுகிறார்கள். இன்னுஞ்சிலரோ நிராகாரமாயிருக்கிறார்கள். ஸித்தாச்ரமத்திற்குப்போய்த்தங்குகிற அதிதிகள் நன்றாய் உபசரிக்கப் படுகிறார்கள். அந்த ஆச்ரமத்தில் மொத்தத்தில் தொண்ணூற்றேழு யோகிகள் இருக்கிறார்கள். அவர்களில் அனேக அந்தஸ்து உண்டு.

புதிதாய் வந்தவர்களுள் ஒருவராகிய பாபுப்ரமோதநாதரை ஆச்ரமத்திற்குள்ளே அழைத்துப்போகாமல் வெளியிலுள்ள இருப்பிடத்திலிருத்தி அவர் காலமெல்லாம் மிலேச்சரைப்போல ஜீவித்ததனால் பரிசுத்தமாகும் பொருட்டுப் பஞ்சாக்கினி ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லினார்கள். அதற்குப் ப்ரமோதநாதரும் சம்மதித்தார். அவரை ஒரு சிறுவுச்சலத் (பாண்தேரல்) தின்மேல் உட்காரச்செய்து அவருக்கு முன்னால் சுமார் இரண்டரை அடி தூரத்தில் நான்கு பெரியஹோமகுண்டங்களில் அக்னிச்சுவாலை செய்தார்கள். சூரியனது உக்கிரமானகிரணங்கள் அவர்மேல் காய்ந்தன. இந்த ஸ்திதியில் 61 நாள் வரைக்கும் இருந்து பின்பு தீக்ஷை பெற்றார்.

ஸித்தாச்ரம யோகிகளில் முதன்மைபெற்ற இருவர் இவரை ஆச்ரமத்திற்குக் கொஞ்சத்தூரத்திலுள்ள ஒருஇடத்திற்கு இட்டுக்கொண்டுபோனார்கள். அங்கே பத்மாசனம் இட்டு சமாதியிலிருந்த இரண்டு யோகீஸ்வரர் களைக்கண்டார். அவர்கள் அதிக உயரமானவர்களாகையால் பத்மாசனமிட்டு உட்கார்ந்திருந்தும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்களைக் காட்டிலும் உயர்ந்திருந்தார்கள். 'இந்த இரண்டு மகாத்மாக்களும் இந்த ஆச்ரமத்திற்கு குருஸ்தானம்' என்று முதன்மை பெற்ற இரண்டு யோகிகள் ப்ரமோதநாதருக்குச் சொல்லினர். அவர்கள் சமாதியிலிருந்து கண்விழித்துப்பார்க்கிறதேயில்லை. ஆயினும் அந்த ஆச்ரம ப்ரதேசத்துக் காரியங்கள் சரியாய் நடந்துவரும்பொருட்டு ஒவ்வொருவரும் இன்ன இன்ன செய்யவேண்டுமென்று மானஸீகமாய் கட்டளையிடுகிறார்கள், மற்றவர்களும் அதை மானஸீகமாகவே தெரிந்து செய்கிறார்கள். குருஸ்தானத்திலிருப்பவர்களாகிய இருவரும் வெகுகாலமாக இந்த நிலைமையிலிருக்கிறார்கள். ப்ரமோதநாதரை உள்ளே அழைத்துக்கொண்டுபோன இரண்டு யோகிகளும் குருக்ஷேத்திர யுத்தத்தைப் பார்த்தவர்கள். ஹிமோத்கிரியின் மேலே போகப்போக மனிதர் செல்லமுடியாத அனேக வேறு ஆச்ரமங்களும் இருக்கின்றதாகவும் அவ்விடங்களில் வியாஸ முனிவரைப்போலொத்த ரிஷீசுவரரால் இன்னும் வசிக்கிறதாகவும் சொல்லினார்கள்.

ப்ரமோதநாதரும் அவர்களோடும் ரிஷிகளுடன் 5 வருஷ காலமிருந்துவிட்டு பிறகு கீழிறங்கிவந்திருக்கிறார்கள். அந்த ஆச்ரமத்திற்கு மறுபடியும் போகப்போகிறார்கள்.

பி. எஸ் சுப்பிரமணிய ஐயர் பி. ஏ.

[இந்த விர்த்தாந்தம் வங்காளத்துப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளியானதன்றி மிஸ்டர் ஸி. முகோபாத்தியார், எம். ஏ. அவர்கள் பதிப்பித்துவரும் "Light of the East" என்னும் ஹிந்துமத வேத வேதாந்தசித்தாந்த விஷயமான மாதாந்தப் பத்திரிகையிலும் வெளியாயிற்று. இச் சங்கதிகளைப் பலர் நம்பாமல் பல ஆக்ஷேபனைகள் சொன்னதாகவும் நிர ஆராய்ந்து பார்த்தபின் அவையெல்லாம் காரணமற்ற ஆக்ஷேபனைகளாக இருக்கின்றனவென்றும் இந்தவிருத்தாந்தத்தை மிஸ்டர் ஸி முகோபாத்தியர் எம் ஏ. அவர்கள் உண்மையாகவே நம்புவதாயும் ஆத்மஞானவழியில்விசாரஞ்செய்துகொண்டே ரானால் இன்னும் அதிசயமானவைகள் எத்தனையோவிருக்கின்றனவென்றும் இவைப்போல் ஸித்தாச்ரமங்கள் இமோத்பருவத உச்சியிலும் மலைச்சாரலிலும் எத்தனையோ இருக்கின்றனவென்றும் நம்மைக்குவந்த சென்ற அக்டோபர்மாசத்துச் சஞ்சிகையில் அவர்வற்புறுத்திக் கூறுகிறார்:—வி. ஸி. ப.].

ப்ரம்மவித்தியா குறிப்புகள்

'சிவேபாஹி' என்று சாக்தர்கள் கூறுவார்கள். சக்தியை வணங்கினால் முக்திபெறலாம். நினைத்த சித்தி பெறலாம். ஈசுவரபக்தி பெறலாம். ஆனால் அப்பரதேவதையை வணங்கும் வழியை உன்னி வணங்கவேண்டும். அவளுடைய உக்கிராவஸரங்களைத் தியானிக்கவும் நம்மாலாகாது- அவளுடையசாந்தாவஸரத்தைத் தியானித்து அவள் பிரஸாதத்தைப்பெற்றால் நலம். சிலர் தேவி பூஜை செய்கிறோமென்று பல அசந்தர்ப்பங்களெல்லாம் செய்கிறார்கள். மாம்ஸம் மது முதலியவைகளை நிவேதனம் செய்து தாமும் குடிப்பதுமன்றி ஸ்திரீகள் குழந்தைகள் எல்லோருக்கும் கொடுத்து "சிவே பாஹி"யென்றுகூக்குரலிட்டு முகம் மலர முழி சிவக்க சித்தம் தடுமாற தாம் இருக்கும் இடம் தேவலோகம்போல் தோண ஆடை அவிழ்ந்தது தெரியாமல் ஆட எல்லோரும் பாட பல்லையிளிக்க ஊரார்சிரிக்க உலகம் இகழ தமக்கும் கஷ்டம் நிகழ அந்தோ! கஷ்டம்! என்றுகதற, கடைய அன்னத்துக்கு விதியின்றி ஊருராய் உலாத்த அம்பிகையும் தானும் அம்பலத்துக்குவர நேரிடும். குடிபெருத்தால் மிடிபெருக்கும். மிடி பெருத்தால் இடி பெருக்கும். இடி பெருத்தால் குடி துலையும். குடி துலைந்தால் சொம்பைக்கையில் தூக்கி வீடுவீடாய்ப் போகவேண்டுவதே முடிபுரை. ஆனதால் அந்த வழியில் இரங்குபவர்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்-

* *
*

'நான் சிவனேன்னு இருந்தேன்' என்று எல்லோரும்சொல்லுவதுண்டு- அது எப்பொழுதும் சும்மாயிருந்தேனென்று சொல்வதற்குப்பதிலாகப்பெரியோர்களும் ஸ்திரீகளும் பாலர்களும் சொல்வார்கள். "சிவனென்பது" உலகவழக்கில் சிவனே என்று ஆயிற்று. ஆனதினால் நமது மஹான்கள் எப்பொழுதும் ஈசுவரனையே நம்பியிருக்கிறார்கள். இது பாமராஸ்திகன் வாயினின்றும் அடிக்கடி வரும். ஆனதினால் அவன்வாக்கிலும் ஈசுவரன் குடிகொண்டிருக்கிறார் "மய்யேவ மந ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேசய நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்சய:" "உன் மனமும் புத்தியும் ஊர்ஜிதமாய் என்னிடத்தில் நிலைபெறுக, அப்படிச் செய்வாயானால், இவ்வுடலழிந்தபின் என்னிடத்தே சேர்வாய்என்று"பகவான் அர்ச்சுனனைப்பார்த்துக் கூறியிருக்கிறார், ஆனதினால் அவனை மனத்தில் எப்பொழுதும் தியானிக்கவேண்டியதவசியம். அவனைத்தியானிப்பதைத்தவிரவேறு வழியில் அடையமுடியாது. சகுண உபாஸ்தி செய்தால் நிர்க்குணோபாஸ்தி தானாகக் கைகூடுமாதலால் நாம் ஜெகதீசனை கிருஷ்ணராம்ராம்கோவிந்த ஹரி ஹரி விஷ்ணுஸநாதனவேணுகோபால ராம் என்றுஅவரை எப்பொழுதும் பக்தியுடன் தியானித்து நாம் முக்தியடைய வழிபார்க்கவேண்டும். நமது பாலியமும் யௌவனமும் நமது சொந்தமென்று எண்ணுவது கூடாது, அதைப் பற்றி ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறோம்-

"நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ் கரணே ப்ராப்தே ஸந்நிஹிதே மரணே பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே" மனிதன் தன்னுடைய சரீரத்தைச்சொந்தமென்று நினைக்கக்கூடாது, உருத்திரபூமியும் நரிக்கூட்டங்களும் அந்தச்சரீரத்தைத் தங்கள் சொந்தமென்று நினைக்கின்றன. "பருத்த தொந்தி நம்மதென்று நாமிருப்ப நாய் நரிகள் பேய் கழுகு தம்மதென்று தாமிருக்குந்தான்" என்றபடி நம் சரீரத்தை சதமெனவெண்ணி வீண்காலம் போக்குவது நமக்கழகல்ல, நாமெல்லோரும் இம்மைப்பயனை எவ்வளவு அடைவதற்குப்பிரயாசைப்படுவோமோ அவ்வளவு மறுமையில் நற்பதவி கிடைக்கவேண்டுமென்று பிரயாசைப்படவேண்டாமா? நாம் முக்தியடைய நல்வழியைத்தேடுவதற்கு சரீராதி அவயவங்கள் சரிவர இருப்பதற்குள் தேடுவோமாக,

* *
*

"மநோ நாம மஹாவ்யாக்ரோ விஷயாரண்யபூமிஷு சரத்யத்ர ந கச்சந்து ஸாதவோ யே முமுக்ஷவ:" மனஸ்என்கிறபுலியானது விஷயம் என்கிற ஆரண்ணியத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்க மோக்ஷாபேக்ஷையுள்ளவர்கள் அதனிடத்தில் போகமாட்டார்கள் என்று ஆன்றோர் கூறியிருக்கிறார். நம்முடைய மனதோ புலிக்குச் சமானமாய், நம்மைத்தன்வசப்படுத்தி மிக்க அவஸ்தையிலாழச்செய்கிறது நாம் மனத்தால் தான் பிறவிக்கடலைத் தாண்டமுடியாதலைகிறோம். இப்பிறவிக்கடலைத்தாண்டுவதற்கு நம்மனசு நல்வழியில் செல்லவேண்டும். அந்தப்புலியின்வழி நாம் செல்லலாகாது. அதற்கு நாம் செய்யவேண்டுவது என்னவெனில், அதை புத்தியென்னும் பாணத்தால் எய்து நம் வசப்படுத்திக்கொண்டு நல்வழியைத்தேடவேண்டும் அதற்கு என்ன வழி யென்றால்,

* *
*

"குருவைத்தேடி குணத்தைத்தேடு" என்றபடி குருவை நாடித்தேடவேண்டும். நமக்குச் சற்குருநாதன் சகவாசமிருந்தாலே போதும். அதிலும் அவருடைய உபதேசம் இருந்துவிட்டால் எவ்வளவு நல்ல பலனைத்தரும் என்றெண்ணுகிறீர்கள், நாம் ஒருநாளும் அடையாத பேரின்பமெனும் பெருநிதியைப்பெறலாம், அதற்குக் குருவினிடத்திற் பக்திசெய்வதே பெருஞ்சாதனம், அவரை அண்டி அவரிடத்தில் நான் எப்படி உஜ்ஜீவிப்பேன் என்று அவரைப் பலவித வந்தனபூர்வமாய்த் தோத்திரஞ்செய்து அவரருள்பெற்று மனதை நிலைநிறுத்தி அப்பேரின் ஆட்டத்தேடு ஆடாது இப்பிறவிக்கடலைக்கடக்க நல்வழி தேடி அவ்வழி நின்று நற்கதி பெறுவோமாக.

* *
*

"அஹம் ப்ரஹ்மாஸ்மி" நானே பிரமம் என்ற அபரோக்ஷாநுபூதி பெறுவதற்கு இப்பொழுது ஆயிற்றென்று மனத்தை தளரவிடாது அவர் சரணத்தைப்பற்றி நின்றால் அப்பேரின்ப நிலையான எச்சென்மத்திலாவது பிறவிக்கடலைக்கடந்து பெருமுக்தியடையலாம், சுபம்-

ஞாணு காநாஹவஶதகம்

(கநாவஸ்யெத)

கடாவாஒஹவிஒஷ்யகாஜுகெபிமுங்கிம்வ நவஸதாம்
ஜீநாம்ஹாத்ராணாம்ஷிதவிஷய்ம்ஸாம்ஶலாஹ
ஶம்| ஸடாஜெ்யாதிஷிவ்யம்மிஸ்ஶவமிவிநூதியம்,
ஶ்ராஒதரம்ஶம்ஸாம்ஶம்ஸதத ஓவவத்யவிவஷ்ய
ஶா|| எய|

கடாவாஒஹவிஒஷ்யஸநியமெயொகூவிவடுந்,
ஓடாஶீக்ஷாம்வணாஶ்ரயஸ்மெளக்குஶ்ரதிவயெ|
டியாநாநகாஒஜவஹ்த்வடிஒயொழுக்ஷமாநவ,
ஶ்ராஒதளதூம்வாயபுவ்ரமிததா ஶிக்ஷாவஹயெ
ஞாநு|| எக|

கடாவாஒஹவிஒஷ்யஸததநாஹஸம்யாய ஹிகா
நு, வஒவாடிாக்ஷீஸ்ஒநா:கதகாமுயஒத ஒஹபுாமி
யஜி:| ஶ்ராஒதஶ்ஒவஶ்ஒவஸாஶிதவாவாஹு
நியபோநு, வடுஞ்ஹிஷாஒஶ்ஷாநயிநிஶஒாயபுவ்ரத
யாநு|| எஉ||

கடாவாஒஹவிஒஷ்யஸததஹிகலூநுகமுபத:
ஞஒம்ஸவபும்யஒஜஷவிகமெநாயாயஹிகாநு|
யயாஶாவம்விஸாநுஹநிவாணஒஹவாஹவாநு
வடும்ஶுவ்ரத்யகூாநிவநிஶஹஸாராஜ்தத நந்நு||

கடாவாஒஹவிஒஷ்யகூவநநிரதாம்ஶூஒஹிவடுந்
கூவிஒஞணாஒக்ஷாக வ்ரவயவமிவித்யாநாவ ஒ
வாநு| கூவிஷாவெஷாயபுாநு ஸஹயிமக் ஜீாம்வஹ
யத:, கூவிஒஒசமாஸ்ரு ஸ்ரீஹாவமிவிதாய்யாகஹஸ
யாநு|| எச||

கடாவாஒஹவிஒஷ ஶ்ரமாவாண ஒஹஒவெகா
விகாநு, கூவிஒக்யாமும்யஹபுாநு கூவிதவிவ ஒம்த்ராம்
ஶுவிஹிகாநு! கூவித்ம்த்ரா கிம்விகூவிதவிவஶிழும்
கியதிஒயா, கூவிஒஒசலூம் ஒவடியும் நிஶஹமணஒமயம்
கமுபத:|| எரு|

கடாவாஒஹவிஒஷ்யவநாவமதாநு யஹநிவதாநு
ஶ்ரஹவூாம்ஒவதாவபுாநியஹநிவதாநுவம்வதவஸ:
யடிாமும்வாநு விஸாநுவ்ர கிவநயதீநாஹ ஶநடாநு
ஜஸாநித்ரீணுஶாமிவிஶ வமிவ்ரத்யாஶ்ரிதபாநு||

கடாவாஒஹவிஒஷ்யநியத:ஶநம்ஒஷாபஶஜிதாநு
மவாஶ்ராஸாநூாஹாதிவிவிடியதிஒஷணக்ஷாயிஹாஷா|
ஈயத்ஸம்ஶாணூஹ்வாாதழுஹ்ரூஹலாயஹவழு:
வாா நதிக்ஷீாஜூாயிவாநிஹஒரூாவஶிமிராடு|| எள||

கடாவாஒஹவிஒஷ்யவ்ரதஹாவிதஹத்யாஶ்ரஹஜாஷ்ாம்
வநீஹஞவ்யாராஸஹநியஹஹநஹியபுாதஹ்ரூஹ:|
யயாமீநா:வணபுா:வவநவமிதா:கஹபுமதிஹி:
தயாஹ்யாம்ஒவஒஷயவ்ரகடுஹாவடிாவூாந்யிஹவ:
கடாவாஒஹவிஒஷ்யவ்ரகநஶநம்வாயவாஹம்
வ்ரதம்வ்ராயயூாநம்ஹிஹமிமிஶாஹாஒவஶஹயவா|
ஹாவ்ரஹூாம்வாஹ்ரஶாவதநஹநூணாகமெஹ
வ்யவாமும்ஒவடிா:வம்கமெஹவிவஹாதாம்கமிஹவம்||

கடாவாஒஹவிஒஷ்யகமிஹஞநிஹ்ரஒஒத்யவடுாதாம்
ஹஹாாஜ்ராய்யாயம்ஹநாநிகாாஜம்ஸநியஹ:|
ஹாடாவிஹிஒக்ஷஒத்ரவிடியதிநாகாஒவபுவிகாடிம்
ஶிமாடிஹபுூாஒநஶிவஹஜநவிஹஶ்ஶிவவிஒஹா|| அய

கடாவாஒஹவிஒஷ்யஶாாவாக்யவ்ராவாத்ரதத
நா:, கியஙம்விஸ்காமும் விஶதஹவிஙஹூஹாவி
த:| ஜஒஒமவபுாவஒஒத்ரவபுா கஹவி நிவதப்ய
க்ஷாய:ஒஹா, ஶிஒஒவகாணும்விஹ்ரஸாதஷவமிவ்
ஒஶபுாநாஹவிதா| அக||

கடாவாஒஹவிஒஷ்யஜஶடாடியாக்ஷாவ்ரஹயக்ஷ
வ்ரஒஹாமீபுமாஹாத்ரம்ஜஶதிஜநிஹஸ்கஹபுஹமுடிம்|
விநியபுாயபுய்யாயஹவிநிய கஹூாவவஶக்ஷ:
தயாயதாஹஸாவஹஹாவதடிஒந்யாவநதடும்|| அஉ||

கடாவாஒஹவிஒஷ்ய ஸநியஹயத்ஶ்ரணதஹவித:|
தஒணாஹபுஒஒஜூாவி ஹூாடுவபுித வீமாஸநவா:|
ஶமீாஹ்யம்வம்யம்ஸகமெவிவிழுஸ்யத்யவிவஶ:
ஶிஒஒவகாஒஙூாஙஹஸஹயிஶஹயணாயாாடுவீம்||

கடாவாஒஹவிஒஷ்யஶிவஹஜநவிஸாநிவஶிஒவ
த்யஜஸ்ரம்ஜிஹூாஒஶ்ரயுதமிமிஶநாஹ்ஜ்தாவஸாநு
கஷிஶ்ரஒஹூஜ்ராதீம்ஹஸ்ரணஜிவவய ந்யாநுகமுபத:
வநஹூாநிசபும்ஶாநயிமதஶிஒஒவகாணுயோாநு||
கடாவாஒஹவிஒஷ்யகூவநவநஹகாஙஸாஹபும்
கடாவாஹளஜஹ்யாம்ஹவஹவஹயம்ஹாவஹஜநாக|
கடாவாஹ்யாம்விஸ:பஶாவதிவடிசம்சஹஜஒந
கடாவாஹ்யாம்ஹ்ரஒவாஜநிஜ்திஹஹாஒாமஜபத:||